# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 15, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாட்டின் 80-ஆவது சுதந்திர தினம் சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி, தில்லி செங்கோட்டையில் நடைபெறும் பிரம்மாண்ட விழாவில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.
   I. பிரதமரின் உரையில் மத்திய அரசின் சாதனைகளுடன் புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகளும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுதந்திர தினத்தையொட்டி, நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   II. நிகழாண்டு சுதந்திர தின விழா, 'வந்தே மாதரம் தேசியப் பாடலின் 150-ஆவது ஆண்டு கொண்டாட்டம்' மற்றும் '2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளைஞர் சக்தி' ஆகிய கருப்பொருள்களில் நடைபெறுகிறது. மேலும், செங்கோட்டை கொண்டாட்டங்களில் முதல்முறையாக வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட உள்ளது.

2. தென்னாப்பிரிக்க நாடான ஜாம்பியாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை, வன்முறை மற்றும் வாக்குச் சீட்டுகள் திருடப்பட்ட சம்பவம் காரணமாக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.
   I. தாமிர வளம் நிறைந்த ஜாம்பியாவில் தர்போதைய அதிபர் ஹகைண்டே ஹிச்சிலேமா 2-ஆவது முறையாகப் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து 13 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களில் முதன்மை எதிர்க்கட்சிகளின் கூட்டணித் தலைவரான பிரைன் முந்துபிலே அதிபர் ஹிச்சிலேமாவுக்குக் கடும் போட்டியாளராகக் கருதப்படுகிறார்.
   II. பொதுவாக அமைதியான முறையில் தேர்தல்கள் நடைபெறும் ஜாம்பியாவில், இம்முறை தேர்தலுக்கு முன்னதாகவே அதிபர் ஹிச்சிலேமா எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்க முயலுவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

3. உலக சர்ஃபிங் லீக் தொடரின் ஒரு பகுதியாக மாமல்லபுரத்தில் நடைபெறும்

ஷோர் டெம்பிள் கிளாஸிக் கியுஎஸ் 2000, ப்ரோ ஜூனியர் பிரிவுகளில் ஜப்பான் போட்டியாளர்கள் காலிறுதி, அரையிறுதியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்திய அணியினர் ஏமாற்றத்துடன் வெளியேறினர்.

4. இந்தியா தனது 80-ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் நாளில் (ஆக. 15), இந்திய அணி தனது 600-ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் களம் காண்கிறது.
   I. இந்த மைல்கல்லை எட்டிய 3-ஆவது அணி இந்தியா. இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதல் இரு அணிகள். 1932-இல் தனது முதல் டெஸ்ட் ஆட்டத்தை இங்கிலாந்துக்கு எதிராக விளையாடியது இந்தியா. அதில் இங்கிலாந்து வென்றது.

5. கனடியன் ஓபன் டென்னிஸ் போட்டியில், அமெரிக்காவின் பென் ஷெல்டன், போலந்தின் இகா ஸ்வியாடெக் தங்கள் பிரிவில் சாம்பியன் ஆகினர்.

6. சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (எஃப்ஐஹெச்) ஆடவர், மகளிருக்கான 16-ஆவது உலகக் கோப்பை ஹாக்கி போட்டி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் சனிக்கிழமை (ஆக. 15) தொடங்கி, வரும் 30-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

7. இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.38,424 கோடியாக உயர்ந்திருப்பதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

8. சலுகை பரிமாற்றவசதி மூலம் ரூ.5.43 லட்சம் கோடி (56.85 பில் லியன் டாலர்) அந்நிய செலாவணி ஈர்க் கப்பட்டதாக ரிசர்வ் வங்கி தெரிவித்தது.
   I. அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு சமீப காலமாக வீழ்ச்சிய டைந்துவரும் நிலையில், வெளிநாடுவாழ் இந்தியர்களிடமிருந்து (என்ஆர்ஐ) அந்நிய செலாவணி நிதி திரட்டுவதை மேம்படுத்த பல்வேறு முன்னெடுப்புகளை ரிசர்வ் வங்கி மேற்கொண்டு வருகிறது.
   II. அதன்படி என்ஆர்ஐ-க்கள் இந்திய வங்கிகளில் தங்களது சேமிப்புகளை வெளிநாட்டு கரன்சியில் பராமரிக்கும் வெளிநாடு வாழ் நபரின் வெளிநாட்டு கரன்சி (வங்கி) சேமிப்புத் திட்டம் அல்லது எஃப்சிஎன்ஆர் (பி) திட்டம் மற்றும் வெளிப்புற வணிகக் கடன்கள் (இசிபி), வெளிநாட்டு கரன்சி கடன்கள்

(ஓஎஃப்சிபி) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

III. இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'எஃப்சிஎன்ஆர் (பி) சேமிப்புகளுக்கான பரி மாற்ற வசதிக்கு எதிர்பார்ப்பை மிஞ்சும் வகையில் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த முன்னெடுப்பின்கீழ் அந்நிய செலாவணி வரத்து பன்மடங்கு அதிகரித்துள்ளது.

IV. எனவே, ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை எஃப்சிஎன்ஆர் (பி)-இன்கீழ் திரட்டப்படும் சேமிப்புகளுக்கு மட்டுமே இந்த சலுகைபரிமாற்ற வசதி வழங்கப்படவுள்ளது. முன்பு செப்டம்பர் 30-ஆம் தேதி வரை இந்த முன்னெடுப்பு நீட்டிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது ஆகஸ்ட் 31-ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

V. திரட்டும் பணிகளை டிசம்பர் 31-ஆம் இசிபி மற்றும் ஓஎஃப்சிபியின் நிதி தேதி வரை ரிசர்வ் வங்கி மேற்கொள்ளவுள்ளது. எஃப்சிஎன்ஆர் (பி) சேமிப்புகள் மூலம் ரூ.5 லட்சம் கோடி (52.3 பில்லியன் டாலர்), ஓஎஃப்சிபியின் கீழ் ரூ.26,600 கோடி (2.805 பில்லயன் டாலர்) மற்றும் இசிபியின்கீழ் ரூ.16,618 கோடி (1.741 பில்லியன் டாலர்) என மொத்தம் ரூ.5.43 லட்சம் கோடி திரட்டப்பட்டுள்ளது.

VI. இதனால் ஆகஸ்ட் 7-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தின் நிலவரப்படி இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு ரூ.1.34 லட்சம் கோடி (14.136 பில்லியன் டாலர்) அதிகரித்து ரூ.67.48 லட்சம் கோடியாக (707 பில்லியன் டாலர்) உள்ளது' எனத்தெரிவிக்கப்பட்டது.